நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 48/2022

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாணிக்கம் |
| தந்தை / கணவர் பெயர் | : | ஐயனாரப்பன் |
| கிராமம் | : | கோல்நாயக்கன்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW7 |
| வயது | : | 47 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**3 ம் எதிரி ஆஜரில் இல்லை. மற்ற எதிரிகள் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.41 PM

1. நான் தற்போது காவேரி கிராசில் குடியிருக்கிறேன். நான் டிராக்டர் ஓட்டி வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. எதிரிகள் எனக்கு நன்கு தெரியும். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நான் வையாபுரி என்பவரின் தோட்டத்திற்கு டிராக்டர்ஓட்ட சென்றேன். எதிர் தரப்பினர் ஓட்டக்கூடாது என்று

சொன்னதால் நான் திரும்பி வந்துவிட்டேன். யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. 07.03.2021 ம் தேதி மாலை 04.00 மணிக்குதான் வையாபுரி என்பவரின் தோட்டத்தில் டிராக்டர் என்றால் தேதி சரியாக எனக்கு நியாபகம் இல்லை. வாதி குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் நிலத்தகராறு இருந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சின்னுசாமி மற்றும் இலட்சுமி ஆகிய இருவரும் வையாபுரியின் நிலத்திற்கு அருகில் உள்ள பொதுதடத்தில் நடந்து வந்தபோது அங்கு வந்த எதிரிகள் சின்னுசாமியை இந்த வழியில் வரக்கூடாது என்று சொல்லி கெட்டவார்த்தையால் திட்டியதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல.
2. மினியன் என்பவர் விறகு கட்டையால்சின்னசாமியின் இடுப்பின் மீது அடித்ததாகவும் அதை தடுக்க வந்த அவரது மனைவி இலட்சுமியை எதிரி மினியன் கீழே தள்ளி அவர் கையில் வைத்திருந்த கட்டையால் இலட்சுமியின் இடுப்பிலும் வலது தோள்பட்டையிலும் அடித்தார் என்றும் நாங்கள் தான் சண்டையை விலக்கி விட்டோம் என்றும் போகும்போது எதிரிகள் அனைவரும் கையில் வைத்திருந்த விறகு கட்டையை காட்டி வாதியை மிரட்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
3. எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். அதனால் அவர்களுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.50 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.